செ.வெ.எண்:32 நாள்:24.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் கங்கைகொண்ட சோழபுர பிரகதீஸ்வர ஆலய குடமுழுக்கு விழா முன்னோற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் (23.01.2017) அன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வர ஆலயம் குடமுழுக்கு விழா முன்னோற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் (23.01.2017) அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது :-**

அரியலூர் மாவட்டத்தில் பிரசித்திப்பெற்ற கங்கைகொண்ட சோழபுர பிரகதீஸ்வரர் ஆலய குடமுழுக்கு விழா வருகின்ற பிப்ரவரி மாதம் 2-ம் தேதியன்று நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு வரும் பக்தர்கள் எவ்வித சிரமமின்றி ஆலயத்திற்கு சென்று வர தகுந்த ஏற்பாடுகள் செய்யவதற்கு அலுவலர்கள் உத்தரவிடப்பட்டுள்ளது. பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், குடிநீர், மருத்துவ வசதி, கழிப்பிட வசதி ஆகியவைகள் முறையாக அமைத்திடவும், வெளி ஊர்களிலிருந்து வரும் பயணிகள் எளிதாக ஆலயத்திற்கு வருவதற்கு பேருந்து வசதிகளும், இருச்சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு தனியாக இடம் ஒதுக்கப்படவுள்ள இடங்களையும், இவ்விழாவிற்கு வரும் பக்தர்களுக்கு எந்தவித இடையூருமின்றி வந்து செல்லுவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.ரெங்கநாதன், உடையார்பாளையம் கோட்டாட்சியர் திருமதி.டினாகுமாரி, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் திரு.திருமாறன் மற்றும் வருவாய், வளர்ச்சித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.